# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2008/25 - 2017 මාර්තු මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.03.02

*2008/25 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், கொழும்பு மாநகர சபைக்குள் உள்ளடங்கும் தெமட்டகொடை, வனாத்தமுல்லை வட்டாரத்தில் அமைந்துள்ளதும், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட கொழும்பு மாநகர சபைக்குரித்தான "இறைச்சிக்காக ஆடு மாடுகள் வெட்டுமிடம்" என அழைக்கப்படும் காணியினை இன்றிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தானது என இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

*பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா.உ.),*
*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,*
*17ஆம் மற்றும் 18 ஆம் மாடிகள்,*
*"சுஹுறுபாய"*
*சுபூத்திபுர வீதி,*
*பத்தரமுல்லை.*
*2017, பெப்புருவரி 22.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்டதும், தெமட்டகொடை இல. 30, வனாத்தமுல்லை வட்டாரத்தில், வைத்தியர் டெனிஸ்டர் த சில்வா மாவத்தையில் அமைந்துள்ள, இல. 06 பூர்வாங்க அரச காணி திட்டப்படத்தில் காணித்துண்டு இல. 1 என காட்டப்பட்ட காணியானது 6ஏ. 1றூ. 29.7 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. அதன் எல்லைகள் பின்வருமாறு சூழப்பட்டுள்ளது :*

*வடக்கு : தனியார் காணி, இயற்கைக் கால்வாய் ;*
*கிழக்கு : இயற்கைக் கால்வாய் ;*
*தெற்கு : புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணி ;*
*மேற்கு : பேஸ்லைன் வீதி.*

*03 - 745*